தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre, Homebush Inc.
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2015

ஆண்டு: 9 திகதி: 13.06.15

நேரம்: 2½ மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திரு ச. தேவராசா

மாணவர் பெயர்: ---------------------------------------------------

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஆறு சொற்களுக்குக் குறையாத வாக்கியங்கள் எழுதுக. (15 புள்ளிகள்)

1. வணக்கம்

2. தமிழ்மொழி

3. நடித்தேன்

4. பாய்ந்தது

5. மலர்கள்

6. ஆகாயம்

7. விளையாடினோம்

8. கூவும்

9. முழுநிலவு

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

10. அலைகள்

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

11. வருவார்கள்

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

12. விருந்தினர்கள்

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

13. வணங்கினோம்

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

14. மரங்கள்

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

15. சிரித்தார்கள்

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

2. பின்வரும் பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. (15 புள்ளிகள்)

மனிதனின் அத்தியாவசிய தேவைகளாக உணவு, உடை, உறையுள் (வீடு) என்னும் மூன்றும் விளங்குகின்றன. இவற்றுள் மிகமிக அத்தியாவசியமாக உணவு விளங்குகின்றது. இந்த உணவைப் பெறுவதற்காக ஆதிகாலத்தில் நதிக்கரையோரங்களில் மக்கள் குடியேறினர். விவசாயம் செய்து தமக்குத் தேவையான உணவுப் பொருட்களை அவர்கள் உற்பத்தி செய்தனர். நதிகளில் மீன் பிடித்து தேவையைப் பூர்த்தி செய்து கொண்டனர். ஆடு, மாடு, கோழி போன்றவற்றை வளர்த்து இறைச்சி, பால் என்பவற்றைப் பெற்றுக் கொண்டனர். தனக்குத் தேவையான பொருட்களை தாமே உற்பத்தி செய்கின்ற தன்னிறைவு பெற்ற சமுதாயமாக அக்கால சமுதாயம் விளங்கியது. இவ்வாறு விவசாயம், மீன்பிடித்தல், விலங்கு வேளாண்மை ஆகிய தொழில்கள் தோன்றின.

விவசாயம் செய்வதற்கு அவசியமான மண்வெட்டி, கலப்பை போன்றவற்றையும், சமையல் செய்வதற்குத் தேவையான களிமண்ணால் செய்யப்பட்ட சட்டி, பானை போன்ற மட்பாண்டங்களையும் செய்கின்ற குடிசைக் கைத்தொழில் முறையும் உருவானது. அக்காலத்தில் நாணயம் (பணம்) பயன்பாட்டிற்கு வரவில்லை. பொருளைக் கொடுத்து பொருளை வாங்குகின்ற பண்டமாற்று முறையே இருந்தது. விவசாயி தான் உற்பத்தி செய்த நெல், காய்கறி, பழவகைகள் போன்றவற்றைக் கொடுத்து தனக்குத் தேவையான சட்டி, பானைகளையும். மண்வெட்டி, கலப்பை போன்றவற்றையும் பெற்றுக் கொண்டனர்.

இந்திய உபகண்டத்தில் இருந்து பிரிந்த பாக்கிஸ்தானில் உள்ள சிந்து நதிக்கரை யோரத்தில் அகழ்வாராய்ச்சியை மேற்கொண்ட போது சிந்து சமவெளி நாகரிகம் கண்டு பிடிக்கப்பட்டது. சீனாவில் உள்ள யாங்கிசிக்கியாங் நதிக்கரை யோரத்தில் மண்ணை தோண்டிய போது சீன நாகரிகம் கண்டு பிடிக்கப்பட்டது. முன்பு மொசப்பத்தேமியா என்று அழைகைகப்பட்ட தற்போதைய ஈராக்கிலுள்ள யூபிரதீஸ், தைகிரீஸ் நதிக்கரையோரத்தில் புதை பொருள் ஆராச்சியை மேற்கொய்ட போது மொசபபத்தேமிய நாகரீகம் கண்டு பிடிக்கப்பட்டது. எகிப்தில் உள்ள நைல் நதிக்கரையோரத்தில் அகழ்வாராய்ச்சியைச் செய்தபோது எகிப்திய நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டது. உலகின் மிகப்பழைய நாகரிங்களாக இவை விளங்குகின்றன. நதிக்கரையோரங்களில் குடியேறிய மக்கள் விவசாயம், மீன்பிடித்தல், விலங்கு வேளாண்மை போன்ற தொழில்களைச் செய்ததுடன் தமது ஓய்வு நேரங்களில் ஆடல், பாடல், ஓவியம், சிற்பம் போன்ற கலைகளிலும் ஈடுபட்டு நாகரிகம் மிக்க ஒரு சமுதாயமாக வாழ்ந்தமையை மேற்படி நான்கு நாகரிகங்களும் எடுத்துக்காட்டுகின்றன.

1. மனிதனின் அத்தியாவசியத் தேவைகள் மூன்றும் எவை? (2 புள்ளிகள்)

----------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------

2. தன்னிறைவு என்றால் என்ன? (2 புள்ளிகள்)

----------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------

3. பண்ட மாற்று முறை என்றால் என்ன? உதாரணம் தருக. (4 புள்ளிகள்)

----------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------

4. உலகின் மிகப்பழமையான நான்கு நாகரிகங்களும் எவை? அவை தோன்றிய நாடுகள் எவை? (4 புள்ளிகள்)

| நாகரிகம் | நாடு |
|---|---|
| | |
| | |
| | |
| | |

5. நதிக்கரையோரங்களில் மனிதன் குடியேறுவதற்கு இந்த உரைப்பகுதியில் கூறப்படாத ஒரு முக்கிய காரணம் உள்ளது. அது எது? அதன் முக்கியத்துவத்தை விளக்குக? (3 புள்ளிகள்)

-----------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------

3. **பின்வரும் விடயத்தை 70 சொற்களுக்குக் குறையாமல் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க. (15 புள்ளிகள்)**

கடந்த ஆண்டு டிசம்பர் மாத முதல் வாரத்தில் சிட்னி இயல், இசை, நாடக மன்றத்தினால் நடாத்தப்பட்ட கலைவிழாவுக்கு அப்பா, அம்மா, அண்ணா ஆகியோருடன் நானும் சென்றேன். முத்தமிழ் சார்ந்த பல்வேறு சிறந்த நிகழ்ச்சிகள் மேடையேறின. நாங்கள் அவற்றைக் கண்டு களித்தோம். இடைவேளையின் போது பிள்ளைகள் ஐந்து டொலர்களுக்குக்கான குலுக்கல் சீட்டை விற்பனை செய்ய வருவார்கள் அவற்றை வாங்கி மன்றத்திற்கான வளர்ச்சிக்கு உதவுமாறு அறிவித்தார்கள். முதலாவது பரிசாக பெற்றோர்களுக்கும் இரண்டு பிள்ளைகளும் இலண்டன் சென்று திரும்புவதந்கான விமானப் பயணச்சீட்டுகளும், இரண்டாவது பரிசாக 55 அங்குல சம்சுங் தொலைக்காட்சிப் பெட்டியும், மூன்றாவது பரிசாக சலவை இயந்திரமும் வழங்கப்படும் என்றும், மேலும் ஐந்து ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும் என்று தொடர்ந்து அறிவித்தார்கள். நாங்களும் ஒரு குலுக்கல் சீட்டை வாங்குவோமா ஏன்று அப்பாவிடம் கேட்டேன். நாங்கள் ஒவ்வொரு விழாவுக்குச் சென்றபோதும் குலுக்கல் சீட்டை வாங்கினோம் ஒரு தடவையேனும் பரிசு கிடைக்கவில்லை எங்களுக்கு அதிஷ்டம் இல்லை வேண்டாம் என்றார். எனது சட்டைப்பையினுள் கையை வைத்தேன். ஐந்து டொலர்த்தாள் இருந்தது ஒரு குலுக்கல் சீட்டை வாங்கினேன். நிகழ்ச்சி முடிவில் குலுக்கல் சீட்டுக்களை குலுக்கி எடுத்தார்கள். முதலாவது பரிசை பெற்ற சீட்டு நீலநிறம் A27 என்று அறிவித்தார்கள். எனது சட்டைப்பையினுள் இருந்த குலுக்கல் சீட்டை எடுத்துப் பார்த்தேன். என்னால் நம்ப முடியவில்லை கண்களைக் கசக்கி மீண்டும் பார்த்தேன். நீலநிறம் A27. மேடையை நோக்கி அளவில்லாத ஆனந்தத்துடன் ஓடினேன்.

-----------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------

4. பின்வரும் தனி வாக்கியங்களை தொடர் வாக்கியமாக மாற்றி எழுதுக. (15 புள்ளிகள்)

1. மே மாதம் இரண்டாம் திகதி ஹோம்புஷ் தமிழ் பாடசாலையின் இருபத்தியெட்டாவது ஆண்டு நிறைவுக் கலைவிழா நடைபெற்றது.
2. சிட்னி பகாய் மண்டபத்தின் கடிகாரம் நேரம் 5:30 என்று காட்டியது.
3. முன்னாள் ஆசிரியை திருமதி இராமநாதன் அவர்கள் மங்கல விளக்கை ஏற்றினார்கள்.
4. பாலர் வகுப்பு மாணவர்களின் பாடலுக்கு அபிநயம் பிடித்தல் முதலாவது மேடை நிகழச்சியாக இடம் பெற்றது.
5. முதலாம் வகுப்பு மாணவர்கள் பாடலுக்கு நடனம் ஆடினர்.
6. விசேட வகுப்பு மாணவர்கள் உரையாடல் ஒன்றை நடாத்தினர்.
7. இரண்டாம் வகுப்பு மாணவர்கள் தமிழ்ப்பழமொழிகளைக் கூறினர்.
8. ஆதனைத்தொடர்ந்து பரிசளிப்பு இடம் பெற்றது.
9. பிரதம விருந்தினர், சிறப்புவிருந்தினர்களும், தலைவரும், உப அதிபரும் உரையாற்றினார்கள்.

10. பன்னிரண்டாம் வகுப்பில் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.
11. கல்வி நிலையத்தின் சிறந்த மாணவர்களாகத் தெரிவு செய்யப் பட்டவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.
12. இருபத்தியைந்து வருடகால ஆசிரியர் சேவையை நிறைவு செய்த ஆசிரியை திருமதி மாலினி சோமாஸ்கந்தன் கௌரவிக்கப்பட்டார்.
13. செயலாளர் நன்றியுரை வழங்கினார்.
14. அதன் பின்பு பதினோராம் வகுப்பு மாணவர்களின் கவியரங்கம் நடைபெற்றது.
15. இறுதியாக ஒன்பதாம், பத்தாம் வகுப்பு மாணவர்கள் நடித்த மகனே கண் நாடகம் மேடையேறியது.

5. சிட்னியில் எதிர்வரும் செப்டம்பர் மாதம் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி நடைபெறப் போவதாகக் கருதிக் கொள்ளுங்கள் இங்கே வந்து அந்த விளையாட்டு நிகழ்வைக் கண்டு களிப்பதுடன் சிட்னியிலுள்ள முக்கியமான இடங்களையும் பார்த்து விட்டுச் செல்லுமாறு இலங்கை அல்லது இந்தியாவில் உள்ள தோழன் அல்லது தோழிக்கு 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக. (20 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் ஒருகட்டுரை எழுதுக. (20 புள்ளிகள்)

1. எனது வாழ்க்கையில் மறக்க முடியாத முதலாவது விமானப் பிரயாணம்.
2. உலகில் தொழில் நுட்பம் வளர்ந்து கொண்டே செல்கிறது. தற்போதைய மாணவர்கள் அத்தொழில் நுட்பத்துடன் சேர்ந்தே வளர்கின்றனர். தொழில் நுட்பத்தால் கண்டு பிடிக்கப்பட்ட நவீன சாதனங்களால் மாணவர்களுக்கு ஏற்படும் நன்மைகளையும், தீமைகளையும் ஆராய்ந்து ஒரு கட்டுரை எழுதுக.
3. அவுஸ்திரேலிய அரசாங்கம் வருடத்தில் ஒரு நாளை அவுஸ்திரேலிய சுத்திகரிப்பு தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. பல்வேறு தொண்டு நிறுவனங்கள் அன்றைய தினத்தில் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபடுகின்றன. இதன் முக்கியத்துவத்தை விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.